# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No. 100/2025 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 02 ( PW– 02 ) |
| பெயர் | :– | சிவக்குமார் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | கிருஷ்ணன் |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 06 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி நேர்நிறுத்தப்பட்டார். எதிரிக்காக இலவச சட்ட உதவி நடுவத்தின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:–**

நான் தொளசம்பட்டியில் நெசவாளர் நகரில் வசிக்கிறேன். தொளசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் ஆசிரியராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை தெரியும். எதிரி என் அத்தை மகன். எங்கள் வீட்டிற்கு அருகில் அவருடைய வீடு உள்ளது. என் மனைவி நான் பணிபுரியும் அதே பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணிபுரிகிறார்.

10.10.2024-ஆம் தேதியன்று தொளசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நானும் என் மனைவியும் பணிக்கு சென்றிருந்தோம். மாலை பள்ளி முடிந்து 04.30 மணிக்கு நானும் என் மனைவியும் எங்களுக்கு சொந்தமான பதிவு எண் TN 30 V 5870 கொண்ட Hero Honda Splendar Plus இருச் சக்கர வாகனத்தில் வீட்டிற்கு செல்வதற்காக வெளியே வந்தோம். பள்ளி மாணவர்கள் கூட்டமாக முன்னால் சென்றனர். அதனால் நான் என் இருச் சக்கர வாகனத்தை மெதுவாக ஓட்டினேன். என் மனைவி பின்னால் உட்கார்ந்திருந்தார்.

பள்ளியின் வாயிலைவிட்டு வெளியே வந்தோம். எதிர் பக்கம் காய்கறி கடை ஒன்று உள்ளது. அங்கு நின்றிருந்த எதிரி எங்களை பார்த்தும் அங்கிருந்து எங்களை நோக்கி ஓடிவந்தார். பையில் வைத்திருந்து கொடுவாளை வெளியே எடுத்து ஓங்கிக்கொண்டே வந்தார். நான் வண்டியை நிறுத்தினேன். இறங்குவதற்குள் திடீரென்று எதிரி என் பிரச்சினையில் நீ தலையிடுவாயா என்று சொல்லி அசிங்கமாக திட்டி இன்றுடன் செத்துபோட என்று சொல்லி தலையில் வெட்ட கொடுவாளை ஓங்கி விசிறினார். நான் வலது கையால் தடுத்தேன். கொடுவாள் என்

உள்ளங்கையில் பலமாக வெட்டி காயம் ஏற்படுத்தியது. மீண்டும் எதிரி அதே கொடுவாளால் வெட்ட விசிறினார். நான் மீண்டும் தடுத்தேன். கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவில் வெட்டுப்பட்டு கட்டை விரல் தொங்கியது. பிறகு எதிரி மீண்டும் வெட்ட கொடுவாளை விசிறினார். நான் வலது கையால் மீண்டும் தடுக்க பின்னங்கையில் வெட்டுப்பட்டது. ஒவ்வொரு முறை வெட்டும்போதும் நீ இதோடு செத்துத் தொலையடா என்று சொல்லி வெட்டினார்.

என் மனைவி வண்டியை விட்டு கீழே இறங்கி கத்த ஆரம்பித்தார். நானும் சத்தம் போட்டதும் அருகில் இருந்தவர்கள் ஓடிவந்தனர். அருகில் இருந்த பள்ளி மாணவர்களையும் நெருங்க விடாமல் எதிரி கொடுவாளை காட்டி விசிறினார். என் ஆடைகள் இரத்ததால் நனைந்துவிட்டன. எதிரி கொடுவாளை என்னை நோக்கி காட்டி இன்று நீ தப்பித்துவிட்டாய் என்றிருந்தாலும் உன் சாவு என் கையில்தான் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து பெண்கள் ஓட்டும் மிதிவண்டியில் சென்றார்.

என் தம்பிக்கு என் மனைவி தகவல் சொன்னார். அவருக்கு வேறு வேறு சிலரும் தகவல் சொல்லியிருக்கிறார்கள். தனியார் அவசர ஊர்தியை வரவழைத்து அதில் என்னை ஏற்றி சேலத்தில் உள்ள வள்ளி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். மருத்துவர் எப்படி காயம் ஏற்பட்டது என்று என்னிடம் கேட்டார். நான் நடந்ததை சொன்னேன். அதன்பிறகு அறுவை சிகிச்சை நடுவத்திற்கு என்னை கொண்டுச் சென்றனர்.

அறுவை சிகிச்சை முடிந்து இரவு 01.00 மணிக்குபிறகுதான் என்னை வெளியே கொண்டுவந்தனர். நான் அங்கு சுமார் 05 நாட்கள் உள்நோயாளி -யாக சிகிச்சை பெற்றேன். மறுநாள் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னை வெட்டுவதற்கு எதிரி பயன்படுத்தியது கொடுவாள். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் கொடுவாள்தான் அது. அந்த கொடுவாள் **அ.சா.பொ-01** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நானும் எதிரியும் ஒன்றாக படித்தவர்கள். அவர் நன்றாகதான் படித்தார். எதிரியின் தகப்பனார் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர். படிக்கும்போது அவர் பெருமையாக பேசுவார். நான் படித்து வேலைக்கு சென்றுவிட்டதால் என்மீது எதிரிக்கு பொறாமை. எதிரியின் தாயார் என் அத்தை. எதிரி அவருடைய தாயாரை ஒருமுறை அடித்தபோது நான் சென்று கேட்டேன். நீ படித்து வேலைக்கு சென்றால் பெரிய புடுங்கியா என்றும் பிரச்சனையில் எதற்கு தலையிடுகிறாய் என்றும் என்னிடம் சண்டை போட்டார். எங்களை எங்கு பார்த்தாலும் எதிரி திட்டுவார்.

**குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் புகாரிலும் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்திலும் சொன்னேனா என்றால் சரிதான்.ஆரம்பத்தில் நானும் என் மனைவியும் வெவ்வேறு பள்ளிகளில் வேலை செய்தோம் என்றால் சரிதான்.

எனக்கு திருமணம் ஆனபோது எதிரியின் குடும்பத்திற்கும் என் குடும்பத்திற்கும் சுமூக உறவு இருந்தது என்றால் எதிரியை தவிற மற்றவர்கள் சுமூகமாக இருந்தனர். எதிரியின் தகப்பனார் தலைமை ஆசிரியராக

பணிபுரிந்தவர் என்றால் சரிதான். எதிரியின் தாயார் அங்கன்வாடி ஊழியராக இருந்தார் என்றால் சரிதான். என் அம்மா வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் ஊதியம் பெறும் வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர் படித்திருந் -தார். எதிரியின் குடும்பத்தினருக்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றால் இல்லை. எதிரியின் சொந்த ஊர் அம்மன் கோவில்பட்டி. எதிரியின் தகப்பனார் தலைமை ஆசிரியராக பணிபுரிந்ததால் அவர்தான் என்னையும் என் சகோதர்களையும் பணம் செலவழித்து படிக்க வைத்தார் என்றால் இல்லை.

நானும் எதிரியும் ஆரம்பத்தில் B.Sc வேதியியல் படித்தவர்கள் என்றால் சரிதான். இருவரும் வெவ்வேறு கல்லூரிகளில் படித்தோம். எதிரி அரசாங்க வேலைக்கு செல்லாவிடினும் விவசாய வேலைகளும் பிற வேலைகளும் செய்து நன்றாக வருவாய் ஈட்டினார் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நானும் என் கணவரும் ஒரே பள்ளியில் பணிபுரிந்தோம் என்றால் சரிதான். என் வீட்டில் இருந்து பள்ளிக்கூடம் 500 மீட்டர் தூரத்தில் இருக்கும். எனக்கும் என் மனைவிக்கும் தனிதனியாக இருச் சக்கர வாகனம் உள்ளது என்றால் சரிதான். இருவரும் தனிதனியாக வருவோம் என்றால் ஏற்கனவே தனிதனி பள்ளிக்கூடங்களில் பணிபுரிந்ததால் தனிதனி வாகனங்கள் வைத்திருந்தோம். ஒரே பள்ளிக் -கூடத்தில் பணிபுரிந்ததால் ஒரே வாகனத்தில் வருவோம்.

பள்ளிக்கூடம் மாலை 04.15 மணிக்கு கலையும். சம்பவம் பள்ளியின் நுழைவு வாயிலில் நடந்தது என்றால் சரிதான். அந்த பள்ளிக்கூடத்திற்கு இரு நுழைவு வாயில்கள் உள்ளன என்றால் சரிதான்.

பள்ளிக்கூடம் கலையும் நேரத்தில் அந்த இடத்தில் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றும் நான் சொல்வதுபோன்று சம்பவம் நடந்திருக்க வாய்ப்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பள்ளிக்கூடம் கலைந்து பெரும்பாலான மாணவர்கள் சென்றுவிட்டனர். கடைசியில் வந்தவர்களே இருந்தனர். நான் வண்டியில் இருந்து விழுந்தேனா என்றால் விழுந்தேன். விழுந்த சங்கதியை புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்திலும் முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நானும் என் கணவரும் சம்பவத்தன்று தனிதனி வாகனங்களில் வந்தோம் என்றும் சம்பவத்தை என் மனைவி பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி மிதிவண்டியில் சென்றது சம்மந்தமாக புலனாய்வின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி கல்லூரியில் படித்த சமயத்தில் விழுந்து தலையில் அடிப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் அது எனக்குத் தெரியாது.

என் வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் இடையே 150 அடி தூரம் இருக்கும். எதிரி தலையில் அடிப்பட்ட நிலையிலும் பிற்காலத்தில் வேலைக்கு செல்லாமல் இளநீர் விற்ற காலத்திலும் அவரை நான் கேலி, கிண்டல் செய்து ஆத்திரப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் கொடுவாளை அடையாளம் காட்டியபோது ஒரு கொடுவாள்தான் நீதிமன்றத்தில் இருந்தது என்றால் சரிதான்.

எதிரி என்னை தலையில் வெட்ட விசிறினார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. நான் மறுநாளே சிகிச்சையில் இருந்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு எதிராக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.